**பொரலஸ்கமுவ நகர சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொரலஸ்கமுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொரலஸ்கமுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,321,200 ஆன வியாபார வரி வருமானம் காசுக் கணக்கிலும் ஆதனவரி கடன் பட்டோர் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,321,200 வியாபார வரி வருமானம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகனம் மற்றும் நூலகப் புத்தகங்களுக்குரிய 2022 ஆம் ஆண்டில் மேலதிகமாக பெறுமானத் தேய்வுக் கணக்கில் சீராக்கப்பட்ட ரூபா 471,733 தொகை 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த தவறு 2024 இன் கணக்கின் மூலம் சரி செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் கணக்கீடு செய்யப்படாத ரூபா 1,196,310 ஆன பொது மலசலகூடத்தின் பெறுமதி மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 925,497 கிரயம் ஒன்றைச் செய்து அலுவலக வளவில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் மலசலகூடத்தின் பெறுமதி என்ப கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | | ரூபா 12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. | செய்யப்படல் வேண்டும். |
| (உ) | நேரடியான செலவு வைத்தல் ரூபா 133,599 இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023.12.31 ஆந் திகதியில் பொது கணக்கில் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் நேர் செலவு வைத்தல் ரூபா 133,598.85 ஆகும். | நேர் செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதியில் அவற்றுக்குரிய உபயோக பபதிவேடுகள் / அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 5,809,154 வேறுபாடு காணப்பட்டது. | ஏதிர்காலத்தில் இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை பேரேட்டுடன் ஒப்பீட செய்த போது ரூபா 12,256,410 வேறுபாடு காணப்பட்டது. | சுரி செய்யப்படும் | மேற்படி |
| (இ) | கடன் பட்டோர் பெறுவனவுகள் பட்டோலையின் பிரகாரம் நிலையான வைப்பு வட்டி பெறுவனவுகள் ரூபா 829,289 ஆக இருந்ததுடன் பேரேட்டில் பிரதி செய்யும் போது ரூபா 571,907 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 257,382 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆயர்வேத இருப்புக் கணக்கு | 306,889 | பட்டோலை | எதிர்காலத்தில் இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நானாவித கடன்பட்டோர் | 12,399,853 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பெறவேண்டிய சேவைக் கட்டணம் | 250,800 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | இனங்காணப்பட்ட மூலதன மானியம் | 1,848,300 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | தொங்கல் கணக்கின் மீதி | 152,658 | பதிவழித்தல் தொடர்பான தகவல்கள் | இவைகள் தீர்த்து வைக்கப்படும். | கணக்கீட்டு வழுக்களை சரியாகக் கண்டிறிந்து சரி செய்தல் வேண்டும். |
| (ஊ) | இனங்காணப்படாத கணக்கின் மீதி | 224,217 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 51,899,404 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,306,548 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| ஆதன வரியும் வரியும் | 28,000 | 27,962 | 30,017 | 14,870 | 27,300 | 27,664 | 32,023 | 27,136 |
| வாடகை | 990 | 990 | 913 | 77 | 990 | 990 | 1,012 | 371 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 750 | 307 | 307 | - | 750 | 238 | 238 | - |
| ஏனைய வருமானம் | 1,070 | 2,219 | 2,219 | - | 1,250 | 1,149 | 1,149 | - |
| மொத்தம் | 30,810 | 31,478 | 33,456 | 14,947 | 30,290 | 30,041 | 34,422 | 27,507 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஆதனவரியும் வரியும்** | | |
| (i) | கடந்த ஆண்டின் இறதியில் ரூபா 27,136,510 ஆன ஆதனவரி கடன்பட்டோர் மீதியில் ரூபா 14,870,430 அதாவது 55 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | குடந்த ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் தற்போது 42 சதவீத அளவு அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் சீடீ.2/3/101 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருதடவை மதிப்பீடு செய்து ஆதனவரி அறவிடவேண்டியிருந்த போதிலும் சபையினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதவனரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய மதிபீட்டு நடவடிக்கைகள் கொவிட் தொற்று நோய்க்கு இடையில் நிறுத்தப்பட்ட பின்னர் மீண்டும் 2023 ஆம் ஆண்டில் மே மாதம் அமுல்படுத்தப்பட்டு புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடல் 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட 06 ஆதனங்களிலிருந்து ரூபா 1,324,207 தொகையும், ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான 10 ஆதனங்களிலிருந்து ரூபா 727,121 தொகையும் ஆதனவரி நிலுவையாக காணப்பட்டது. | சில ஆதனங்களில் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் 2019.12.31 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய ஆதனங்களுக்காக ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகளில் சிவப்பு அறிவித்தல் வழங்கப்படுகின்றது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 மாதம் முதல் 15 மாதங்கள் வரையிலான கால வீச்சில் 18 கடைகளில் நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 242,995 ஆனமையால் கடை வாடகை செலுத்தாத விற்பனை கடைகளின் உரித்து உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் நகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய உடன்படிக்கை தயாரிக்கும் போது அந்த உடன்படிக்கைக் காலம் 03 மாதங்களாக திருத்தப்பட்டுள்ளது. கடை வாடகை நிலுவைத் தொகையில் அறவிடுவதற்குள்ள தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ii) | ஒவ்வொரு கட்டிடத்திற்கும், காணிக்கும் உரியதாக ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மாதாந்த வாடகை அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரின் அல்லது பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 48 கடைகள் 2009 ஆம் ஆண்டின் மாதாந்த திருத்தப்பட்ட கட்டிடத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது இடமளித்தல் மற்றும் உரிய பிரகாரம் பராமரிக்காதிருந்தமையால் கடை உரிமையாளர்கள் உடன்படிக்கைக்கு இணங்க விருப்பம் தெரிவிக்காதிருந்ததுடன் மதிப்பீடு செய்த பின்னர் கடை உடன்படிக்கை செயலிழந்தமையினால் அதனை எதிர்பாலத்தின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது 80 சதவீதமான கடை உரிமையாளர்கள் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து பின்னர் புதிய மதிப்பீடு செய்தல் பொருத்தமானதாகும். | 03 வருடங்களுக்கு ஒருமுறை ஆதனங்களை மதிப்பீடு செய்து வாடகை திருத்தப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 14,903,707 செலவில் உக்கும் கழிவுப்பொருட்கள் 6865 தொன் உம், உக்காத கழிவுப்பொருள் 1754 தொன் உம் கரதியான கழிவுப்பொருள் தளத்தில் போடப்பட்டிருந்தது. உக்குகின்ற கழிவுகளை விற்பனை செய்வதற்காக அல்லது கூட்டுப் பசளை செயற்திட்டத்தின் மூலம் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக செலவிடப்படுகின்ற செலவினங்களை குறைத்துக் கொள்வதற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சமையலறைக் கழிவுகளை விற்பனை செய்து சபைக்கு எதிர்காலத்தில் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் கூட்டுப்பசளை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சபைக்குச் சொந்தமான காணியொன்று காணப்படாதிருந்தமை மற்றும் உக்காத கழிவுப்பொருட்களை விற்று வருமானம் பெறப்பட்டுள்ளது. | கழிவுப்பொருள் செலவினங்களை குறைக்கும் நோக்கில் கழிவுப் பொருட்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் 26 வியாபார நிறுவனங்களிலிருந்து கழிவுப்பொருள் அகற்றியதற்காக ரூபா 633,000 வருமானம் பெறப்பட்டிருந்த போதும் | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான பணிகளை முறைமைப்படுத்துவதற்காக மும்மொழிகளிலும் | உபவிதிகளை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானத்தை சேகரிப்பதற்காக உபவிதி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உடையதாக தயாரிக்கப்பட்ட உபவிதியொன்று உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 40,610 பெறுமதியான இரண்டு கடன்கொடுத்தோர் மீதிகளும் 2019 முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 613,957 பெறுமதியான 17 கடன்கொடுத்தோர் மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2023 ஆம் ஆண்டின் போது முதிர்ச்சி அடைகின்ற ரூபா 1,830,000 பெறுமதியான 04 நிலையான வைப்புக்கள் அதிக வட்டி விகிதத்தின் கீழ் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் முன்னர் காணப்பட்ட 5.22 சதவீத வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | புதிய வட்டி வீதத்தின் கீழ் திறப்பதற்கு முகாமைத்துவக் குழுவுக்கு அனுப்பிய பின்னர் அதன் அங்கீகாரத்தின் கீழ் மீண்டும் கணக்குகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆகக்கூடிய வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 29 காணிகளின் உரித்துறுதிகளை பெற்று உரித்துறுதிகள் ஒரு காணிக்காக மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | சபையின் 12 காணிகளின் அளவிடல் அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. அந்த அறிக்கை கிடைத்தவுடன் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பொரல்கமுவ நகர சபையின் பல்நோக்குக் | நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் திட்டமிடப்பட்டு | கட்டிடத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத்தின் இரண்டாவது மாடி, சிலப் மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்ட போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் 2022 ஆகஸ்ட் மாதம் முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. அந்த நிலைமையில் கட்டிடம் 2023 பெப்ரவரி 09 ஆம் திகதிய சபைக்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களை மீண்டும் ஆரம்பித்தலில் ஏற்பட்ட தாமத்தால் கட்டிடத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட ரூபா 248,789,106 செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்படக்கூடியதாக இருந்ததுடன் கட்டிடத்தின் கம்பி போன்றவைகள் துரப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. | நிர்மாணிக்கப்பட்டதுடன் நாட்டில் காணப்படுகின்ற நிலைமையினைக் கவனத்தில் கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஒப்பந்தகாரரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்த வேலைப்பகுதிகளைக் குறைத்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் திருத்தப்பட்ட திட்டம் மற்றும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மிகுதி வேலைப்பகுதிகளை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2023.10.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உரிய நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் நகர பேணிச் செல்கின்ற கூட்டு முயற்சிக் கணக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபை அங்கீகரித்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 24,000,000 தொகை சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகையிலிருந்து ரூபா 10,000,000 ஆன 02 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | ரூபா 10,000,000 தொகையில் 02 செயற்திட்டங்களின் வேலைகள் 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 14,000,000 இற்குரிய செயற்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபை பயன்படுத்துகின்ற ஏனைய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 06 வாகனங்களின் உரித்தை நகர சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரித்தை நகர சபைக்கு கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |